# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 29/ந/2025, நாள் 23.10.2025**

A. தேவேந்திரன்
திருப்போரூர், செங்கல்பட்டு மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
மறைமலைநகர் நகராட்சி, செங்கல்பட்டு மாவட்டம். – எதிர்மனுதாரர்

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் (வட்டம்), கீழூர், பிரதான சாலை, எண்.42, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஏ. தேவேந்திரன் என்பவரின் 20.11.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.11.2024 அன்று பெறப்பட்டு, 29/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், கீழூர் கிராமம், பிரதான சாலை, எண்.42, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஏ. தேவேந்திரன் என்பவரின் மறைமலைநகர் நகராட்சி ஆணையருக்கு முகவரியிடப்பட்டு படிவம் 1–ன் வழி சமர்ப்பிக்கப்பட்டுள்ள 20.11.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

“செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.13, NH-1, வள்ளல் அதியமான் தெரு, மக்கள் மருந்தகம் எதிரில் பொது மக்கள் பயன்படுத்தும் பொது தெருவை ஆக்கிரமித்து அடுக்குமாடி கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தும் ஜல்லி, மணல் மற்றும் கம்பிகள் தெருவில் கொட்டப்பட்டு பொதுமக்களுக்கு பொது தொல்லை ஏற்படுத்தி வருகிறார்.

இப்பணி மேற்கொள்ளும் கட்டிட உரிமையாளர் கட்டிடத்தின் வெளிப்புறத்தில் எந்த ஒரு பாதுகாப்பு முன்னேற்பாடும் செய்யாமல் பணியை மேற்கொண்டு வருகிறார்.

இதனால், அப்பகுதியில் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் செல்லும் பொழுது கட்டிடத்தின் மேலிருந்து சிமெண்ட் கலவைகள் மற்றும் செங்கல் கற்கள் அப்பகுதி வழியாக செல்லும் பொதுமக்கள் மீது விழுகின்றது.

பணியில் ஈடுபடும் கட்டிட பணியாளர்கள் மற்றும் உரிமையாளரிடம் பொதுமக்கள் கேட்டால் வடமாநிலத்தைச் சார்ந்த கட்டிடப் பணியாளர்களை தூண்டிவிட்டு பொதுமக்களை மிரட்டுவதும் ஆபாசமாக பேசுவதுமாக கட்டிட உரிமையாளர் நடந்து கொள்கிறார்.

பொதுமக்கள் வசிக்கும் பகுதியில் பாதுகாப்பும் இன்றி பணியை மேற்கொள்ளும் கட்டிட உரிமையாளர் மீது மறைமலைநகர் நகராட்சி நிர்வாகம் சட்ட நடவடிக்கை மேற்கொண்டு தெருவில் கொட்டப்பட்டுள்ள கட்டுமான பொருட்களை அப்புறப்படுத்தி கட்டிடம் கட்ட பயன்படுத்தும் பணியாளர்களுக்கு பாதுகாப்பான முறையில் பணியை மேற்கொள்ள பாதுகாப்பு வளையம் அமைத்து பொதுமக்கள் அப்பகுதியை சிரமம் இல்லாமல் பயன்படுத்த மறைமலைநகர் நகராட்சி நிர்வாகம் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என இயக்கம் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்" எனத்தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் குறித்து மறைமலைநகர் நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 12.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. மறைமலைநகர் நகராட்சி ஆணையர் தனது 24.02.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.546/2025/எப்1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்:-

"திரு. என். நலராமன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர், மக்கள் சட்ட விழிப்புணர்வு இயக்கம், கீழூர் அவர்களின் 18.10.2024 நாளிட்ட கடிதத்தில் மறைமலைநகர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13, வள்ளல் அதியமான் தெரு, மனை எண்.42–ல் திரு. வி. கருப்பசாமி என்பவர் மேற்கண்ட விலாசத்தில் கட்டிடம் கட்டுவதால் அப்பகுதியில் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் செல்லும் பொழுது கட்டிடத்தின் மேலிருந்து சிமெண்ட் கலவைகள் மற்றும் செங்கல் கற்கள் அப்பகுதி வழியாக செல்லும் பொதுமக்கள் மீது விழுகின்றன. மற்றும் உரிய பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்கப்படவில்லை என புகார் வரப்பெற்றது.

மேற்கண்ட கட்டிடம் குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு இணையதள வாயிலாக வரப்பெற்ற விண்ணப்ப எண். 020/CP/24, 25/0000919–க்கு வழங்கப்பட்ட கட்டிடஅனுமதி உரிமை எண்.020/BL/2024/00172 நாள்.08.05.2024–ல் வாகன நிறுத்துமிடம் மற்றும் மூன்று தளங்களுக்கு அனுமதி பெற்று கட்டிடம் கட்டி வருகிறார்.

மேற்கண்ட புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள இடத்தை இவ்வலுவலக நகரமைப்பு ஆய்வாளர் நேராய்வு செய்து கட்டிட உரிமையாளருக்கு உரிய அறிவுரைகள் வழங்கி பொதுமக்கள் மற்றும் சாலையில் பயணம் செய்யும் பொதுமக்களுக்கு எந்த இடையூறு மற்றும் ஆபத்து ஏற்படாதவாறு கட்டிட பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் சாலையில் கொட்டப்பட்டுள்ள கட்டுமான பொருட்களை அப்புறப்படுத்துமாறும், உரிய பாதுகாப்பு செய்து கட்டிட பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவித்து உரிய பாதுகாப்பான முறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனை தொடர்ந்து மேற்காணும் இடத்தினை நேராய்வு செய்ததில் கட்டிட அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் கட்டிடம் கட்டி வருகிறார் என தெரியவந்ததை தொடர்ந்து 1998–ஆம் வருடத்திய திருத்தியமைக்கப்பட்ட உள்ளாட்சிகளின் சட்ட பிரிவு 135(2)–ன்படி சட்ட விதிகளின்படி ந.க.எண்.172/2024 நாள்18.10.2024–ன்படி அறிவிப்பு (நோட்டீஸ்) சார்வு செய்யப்பட்டது.

மேலும் அதனை தொடர்ந்து கட்டிட உரிமையாளர் உரிய விளக்கம் தெரிவிக்காததால் தொடர் நடவடிக்கையாக மறைமலைநகர் நகராட்சி கடித எண்.172/2024 நாள்25.11.2024 மற்றும் 03.01.2025 கடிதம் மூலமாக இரண்டு அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக கட்டிட உரிமையாளர் மீது செங்கல்பட்டு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய குற்றப்பத்திரிக்கை தயார் செய்து நடவடிக்கை மெற்கொள்ளப்பட்டு அதனை புகார் மனு கொடுத்த திரு. என். நலராமன் என்பவருக்கு விவரம் தெரிவிக்கப்பட்டது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது." எனத்தெரிவித்துள்ளார்.

4. மேலும் மறைமலைநகர் நகராட்சி ஆணையர் தனது 08.09.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.546/2025/எப்1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

"திரு. என். நலராமன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர், மக்கள் சட்ட விழிப்புணர்வு இயக்கம், கீழுர் அவர்களின் 18.10.2024 நாளிட்ட கடிதத்தில் மறைமலைநகர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13, வள்ளல் அதியமான் தெரு, மனை எண்.42–ல் திரு. வி. கருப்பசாமி என்பவர் மேற்கண்ட விலாசத்தில் கட்டிடம் கட்டுவதால் அப்பகுதியில் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் செல்லும் பொழுது கட்டிடத்தின் மேலிருந்து சிமெண்ட் கலவைகள் மற்றும் செங்கல் கற்கள் மேலே விழுகின்றன என்பதால் கட்டிடம் கட்டும் பொழுது உரிய பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்கப்படவில்லை என புகார் மனு வரப்பெற்றது.

இந்நிலையில் தமிழ்நாடு உள்ளாட்சி நடுவர் அவர்களின் மேல்முறையீட்டு மனு எண். 29/M/2025 நாள்.12.02.2025–ல் காணும் கடிதத்தில் செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், எண்.42, பிரதான சாலை, கீழுர் கிராமத்தில் வசிக்கும் திரு. ஏ. தேவேந்திரன் என்பவர் மறைமலை நகர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13, மனை எண்.42, வள்ளல் அதியமான் தெரு, இணையம் –1ல் திரு. வி. கருப்பசாமி என்பவரால் கட்டப்பட்டு வரும் கட்டிடம் தொடர்பாக அளித்துள்ள புகார் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை விவரம் இந்நகராட்சியின் 24.02.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.546/2025/, எப்1–ல் அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து இப்பொருள் தொடர்பாக செங்கல்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடர நீதிமன்ற இணையதளம் (Website) –ல் நகராட்சி வழக்கறிஞர் மூலம் பதிவு செய்யப்பட்டு e-court Fees செலுத்தப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. (வழக்கு எண்.CRLMP/0002091/2025).

மேற்கண்ட வழக்கு 21.07.2025 அன்று விசாரணைக்கு வரப்பெற்று விசாரணை நடைபெற்றது. அதன் பின்னர் திரு. வி. கருப்பசாமி அவர்களுக்கு 18.08.2025 அன்று செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றம் மூலம் சம்மன் வழங்கப்பட்டு மேற்கண்ட வழக்கு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது." என தெரிவித்துள்ளார்.

5) மனுதாரரின் புகார் மனு, ஆணையரின் அறிக்கைகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

இந்நேர்வில், மனுதாரரின் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள புகார் தொடர்பாக மாண்பமை செங்கல்பட்டு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு (வழக்கு எண். CRLMP/0002091/2025) நிலுவையில் உள்ளதாக மறைமலைநகர் நகராட்சி ஆணையாளரின் அறிக்கை ந.க.எண்.546/2025/எப்1, நாள் 08.09.2025–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b) –ல் கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

Sec. 10. (3) The Ombudsman shall not enquire into matters relating to.-

(a) Xxxxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act 1952 or any matter pending before a Court;

மேற்காணும் சட்டப்பிரிவின்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என்பதால், இப்பொருள் தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 23–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.A. தேவந்திரன்,
எண்.42, பிரதான சாலை,
கீழூர், திருப்போரூர் (தாலுகா),
செங்கல்பட்டு மாவட்டம்–603 108.

2) நகராட்சி ஆணையர்,
மறைமலைநகர் நகராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உ.தி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்